Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 06 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 18 (01-06 1991) சனிக்கிழமை ஓசை: 103

## நிவாரணம் உடன் வழங்க சங்கங்களுக்கு பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள இடப்பெயர்ந்த மற்றும் தொழில் இழந்த மக்களுக்கான உலர்உணவு விநியோகத்தின் அடுத்த கட்டத்தை உடனடியாக வழங்குவதற்கு சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# போரைத் தொடர்வதா?

# பேச்சை ஆரம்பிப்பதா?

## குழம்பிய நிலையில் பிரேமதாசா அரசு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதா அல்லது பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதா என்ற விசயத்தில் பிரேமதாசா அரசாங்கம் குழப்பத்தில் ஆழ்ந்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ராஜீவ் காந்தியின் மரணம் குறித்து இந்திய அரசு விடுதலைப் புலிகள்மீது தொடர்ந்து சந்தேகம் கொண்டிருப்பதாலும் இதுபற்றிய விசாரணை முற்றுப்பெறாததாலும் புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க சிங்கள அரசு தயக்கம் காட்டுவதாக தெரிகிறது. இந்த சிக்கலான சூழ்நிலையில் பேச்சுக்களை ஆரம்பித்தால் இந்திய அரசுக்கு சங்கடமான நிலை ஏற்படலாமென பிரேமதாசா அஞ்சுவதாக தெரியவருகிறது. இந்திய பொதுத்தேர்தலின் முடிவை அடுத்து பேச்சுக்களுக்கான முயற்சிகள் ஆரம்பிக்க கொழும்பு அரசு சிந்திப்பதாக நம்பகரமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில், சிங்கள இராணுவ உயர்பீடம் அரசாங்கத்திடம் மேலும் கால அவகாசம் கேட்டுவருவதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்கா அதிகாரிகளை

## இந்திய புலனாய்வுக் குழு நேற்று சந்தித்தது

(கொழும்பு)

முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தி படுகொலை பற்றித் துப்புத் துலக்கும் இந்திய சிறப்புப் புலனாய்வுக்குழு நேற்றுக் கொழும்பில் இலங்கைப் புலனாய்வுத்துறை சிரேஷ்ட அதிகாரிகளை இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசியது.

மத்திய புலனாய்வு அமைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நிதி நெருக்கடி காரணமாக நிவாரண திட்டங்களில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சு நடைமுறைப்படுத்திவரும் நிவாரணத் திட்டங்கள் பலவற்றில் புதிய மாற்றங்கள் செய்யப்பட உள்ளன.

தற்போது நடைமுறையில் இருக்கும் நிவாரணத் திட்டங்களால் இந்த அமைச்சுக்கு அதிகளவு பணச்செலவு ஏற்படுவதுடன் நடைமுறைச் சிக்கல்கள் பலவும் தோன்றியுள்ளதைத் தொடர்ந்து இம்மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளது இதற்காக இவ் அமைச்சு உலக வங்கியின் ஆலோசனைகளை பின்பற்றுவது தொடர்பாக பரிசீலித்து வருவதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

இதன் முதல் கட்டமாக வறுமை நிவாரண உணவு முத்திரைத் திட்டம் இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் முதல் நிறுத்தப்படவுள்ளது. இதைத்தொடர்ந்து ஜனசக்தித்திட்டம், இடம் பெயர்ந்தவர்களுக்கான மற்றும் தொழில் இழந்தவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் தொடர்பாகவும் புதிய நடைமுறைகள் கொண்டுவருவது பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது. (6

### கைதடி சித்த மருத்துவத் துறைத்

## தலைவர் நடத்தையால் கூட்டத்தில் சலசலப்பு

(நல்லூர்)

சித்த மருத்துவத்துறைப் பெண் விரிவுரையாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டது தொடர்பாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆராய்ந்தது.

நேற்று நண்பகல் பல்கலைக்கழக சிரேஷ்ட பொதுஅறையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சலசலப்பு நிலவியதாக தெரிய வருகின்றது. சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் பவானி கூட்டத்தில் இருந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களைத் கீழ்த்தரமான வார்த்தைகளால் பேசினாராம். கீழ்த்தரமான வார்த்

(6ஆம் பக்கம் பார்க்க)

### போதனா வைத்தியசாலையாக

## மட்டு. வைத்தியசாலை தரம் உயர்த்தப்படவுள்ளது

(மட்டக்களப்பு)

சத்திர சிகிச்சை நிபுணர் உட்பட வைத்திய நிபுணர்கள் இல்லாமலும், எக்ஸ்ரே கதிர் இயந்திரம் ஒழுங்காக இல்லாமலும், சடலங்களை குளிர் ஊட்டும் முறை தூக்கும் இயந்திரம் பழுதடைந்தும், வைத்தியர்கள், தாதிமார்கள் தங்குவதற்கு கட்டிட வசதிகள் இல்லாமலும் இருக்கும் மட்டக்களப்பு வைத்தியசாலை திடீரெனப் போதனா

(6ஆம் பக்கம் பார்க்க)

## உதயனுக்கு மக்கள் அஞ்சலி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளியான சின்னத்துரை உதயன் (23 வயது) (தயா) வீரமரணமடைந்தார்.

இவரது பூதவுடல் கிளிநொச்சி ஜெயந்திநகரிலுள்ள இவ

(6ஆம் பக்கம் பார்க்க)

## பணமாக வழங்க நடவடிக்கை

வடபகுதியிலுள்ள ஓய்வூதியக்காரர்களுக்குரிய கொடுப்பனவுகளை பணமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியத்தை ரொக்கப்பணமாக வழங்குவதற்கு கிராமியவங்கியும், மற்றைய வங்கிகளும் ஏற்பாடுகளை செய்துவருகின்றன.

## தனியாரிடம் அரிசி இறக்குமதி

(கொழும்பு)

அரிசி இறக்குமதி தனியாரிடம் ஒப்படைக்கப்படுமென உணவுக் கூட்டுறவுத்துறை

(6ஆம் பக்கம் பார்க்க)

## டேவிட் கிளஸ்ரோன் 10 நாளில் வெளியேறுவார்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருக்கும் பிரிட்டன் தூதுவர் டேவிட் கிளஸ்ரோன் இன்னும் பத்து நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறுவாரென பிரிட்டன் தூதரகவட்டாரங்கள் கூறியுள்ளன.

இலங்கை அரசிற்கு எதிராக எந்த அறிக்கையும் வெளியிட அவர் விரும்ப வில்லை எனத் தெரிவித்த வட்டாரங்கள் மேலும் தகவல் தருகையில் பிரிட்டனிலுள்ள இலங்கைத்

(6ஆம் பக்கம் பார்க்க)

### அடுத்த மாதத்திலிருந்து.

## க. பொ. த. (சா) பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்பு

(கொழும்பு)

எதிர்வரும் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்கு விண்ணப்பங்களை அடுத்த மாதத்திலிருந்து ஏற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளை பரீட்சைத் திணைக்களம் செய்துள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்கடைசித்திகதி ஜூலை மாதம் 30 - ஆம் திகதியாகும். புதிய பாடத்திட்டத்திற்கு அமையவே வினாத்தாள்கள் தயாரிக்கப்படும்.

## யாழ். வைத்தியசாலைக்கு 65 லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கட்டட திருத்த வேலைகளுக்காக சுகாதார அமைச்சு யாழ். போதனா வைத்தியசாலைக்கு 65லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

சிறிலங்கா முப்படைகளாலும் சேதமாக்கப்பட்டுள்ள யாழ். போதனா வைத்தியசாலையை திருத்துவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்குமாகவே மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் சீமெந்திற்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதால் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் பல கட்டடங்கள் இடையில் நிறுத்தப்பட்டுள்ள

(6ஆம் பக்கம் பார்க்க)

## தபாலக கட்டடத்திற்கு 8 கோடி ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பிரதம தபாலகத்துக்கான புதிய நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு எட்டுக்கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் இம்மாவட்டத்தின் பிரதம தபாலகத்தின் கட்டடம் முற்றாக சேதமடைந்துவிட்டது. இதனால் தபால் திணைக்களம் மேற்படி தொகைப்பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.

பிரதம தபாலகம் முன்னர் இருந்த இடத்திலேயே பிரஸ்தாப புதிய கட்டடம் அமைக்கப்படவிருக்கின்றது. இக்கட்டடம் மூன்று மாடிகளைக் கொண்டதாக இருக்கும் என்று தபால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பெசாவர் ஆயுதக் கிடங்கில் குண்டுவெடிப்பு; பலர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இராணுவ ஆயுதக்கிடங்கொன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் பலர் உயிரிழந்ததாக அஞ்சப்படுகிறது. பெஸாவர் நகரில் இக்குண்டு வெடிப்புச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது.

இந்தக் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஆயுதக்கிடங்கில் இரண்டு மணிநேரம் குண்டுகள் வெடித்த வண்ணமிருந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 45 ஆவது நாள் நினைவுச் சுடர்



வீரஜனனம்
23 . 03 . 1970

வீரமரணம்
17 - 04 - 1991

### வீரவேங்கை ஜீவா
( நா . சிவயோகநாதன் )

( 17 . 5. 1991 அன்று காரைநகரில் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரமரணமடைந்த ஜீவா )

எங்கள் விடியலுக்காய்
விண் விரைந்த விறல் வீரா,
எதிரி தடைபோகும்
எத்தர் உடல் வேகும்
எங்கள் வளநாடு எமக்காகும்!
எம்-
படைகள் களமாடும்
பதர்கள் புறமோடும்
புலரும் தமிழீழம் உனைப்பாடும்!
கால வரலாறு
போற்றிப் புகழ் பாடும்
கனவு நனவாகும் நிமிர்வோம் நாம்!

மிருசுவில் வடக்கு,
மிருசுவில் (R-1422) -குடும்பத்தினர்

## 45 ஆம் நாள் வீர அஞ்சலி



தாயக மண்ணில்
16 — 08 — 1973

தாயக மீட்பில்
18 — 04 — 1991

### வீரவேங்கை றொக்கி
(வரதலிங்கம் செல்வகுமார் - ஆவரங்கால்)

18-04-91 அன்று மன்னார் பரப்புக் கடந்தானில் சிறிலங்கா இராணுவத் தினருடனான நேரடி மோதலில் வீர மரணமடைந்த றொக்கி

இளவயதில் இன்பமதை இறுதிவரை ஏற்காமல்
போராடப் புறப்பட்ட ''றொக்கி''யவன்
மண்மீட்பின் வேளையிலே செங்குருதி தானிழந்து
இம்மண்ணைச் சிவப்பாக்கி மாவீரர் வரிசையிலே
தனையிணைத்துக் கொண்டவன் தான்
மடிந்து விட்டான் பரப்புக்கடந்தானில்
போராட்ட வேளையிலே தமிழ்பேசும் மக்களெல்லாம்
எம் பணியை ஆற்றிடவே புறப்படுவோம் பாசறைக்கு
துப்பாக்கி தனையேந்தி ஒரு தளத்தை அமைப்பதற்கு
பல களங்கள் காணுகின்ற
வேங்கைகளுடன் தானிணைந்து
றொக்கியவன் நடந்து சென்ற
பாதமதை நாம் தொடர்ந்து
ஈழமதை மீட்டிடவே
புறப்படுவோம் களத்திற்கு
இனவெறி பிடித்துவிட்ட இங்கள இராணுவத்தை
கெரில்லாப் போர் முறையில் அடக்கிவைத்த வேங்கைகளே
இன்று துளிர்விட்டு இலைபரப்பி கிளை விட்டு
- வளர்ந்துவிட்ட
வேங்கைகளின் அணியின்று
பெரும் விருட்சம் போல் வளர்ந்த
அணியினிலே தானிணைந்து
தீயுடனே சங்கமித்தான் றொக்கியன்று

(R /1421) – குடும்பத்தினர்

வாங்ஸ்ளம்பரம்

**தவறிவிட்டது**

26-05-91 இரவு சங்குப் பிட்டி ஆலடியில் இருந்து வவு னியா சென்ற பஸ்சில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பாக் ஒன்று தவறிவிட்டது: கண் டெடுத்தவர்கள் சி. குமார சாமி உயரப்புலம் ஆனைக் கோட்டை. அல்லது அண்மை யில் உள்ள விடுதலைப்புலி கள் மக்கள் முன்னணிக்காரி யாலயத்தில் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
(R- 1426)

**தேவை**

ஸ்ருடியோவுக்கு ஆள் தேவை நன்குவேலை தெரிந்தவர்களும் பழகவிரும்புபவர்களும் உடன் நேரில் வரவும் தகுந்தசம்பளம் வழங்கப்படும். A. V. M. போட்டோ கண்டி றோட் சாவகச்சேரி (R-1423)

## ஆந்திராவில் வன்முறை; விசாரணைக்கு உத்தரவு

(ஹைதராபாத்)

ராஜீவ் காந்தி மரணமடைந் ததைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசத்தில் ஏற்பட்ட வன் முறைச் சம்பவங்கள் தொடர் பாக நீதி விசாரணை நடத்த மாநில அரசு உத்தரவிட்டுள் ளது.

பொது உடைமைகளுக்குஏற் பட்டுள்ள சேதத்தை மதிப்பிட வும் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈட்டுத்தொகை வழங்க வும் உயர் அதிகாரிகள் தலை மையில் நிர்வாகக்குழு அமைக் கப்படும் என்றும் மாநில அரசு அறிவித்துள்ளது.

சட்டப்படியான நடவடிக் கைகள் எடுக்கப்படும் என்றும் குற்றமிழைத்தோர் தண்டிக் கப்படுவார்கள் என்றும், ஆந் திர முதலமைச்சர் ஜனார்த் தன் ரெட்டி தெரிவித்தார்.

முன்னதாக தேசிய முன்ன ணிக் கட்சியின் தலைவர் என். டி. ராமராவ் இது குறித்து விசாரணை நடத்தாவிடில் காலவரையறையற்ற உண்ணா விரதம் இருக்கப் போவதாக அறிவித்திருந்தமை தெரிந் ததே.

**காணவில்லை**

திருமதி காசிப்பிள்ளை ஜெய தேவி வயது 55 இளமையான தோற்றம் மனநோயுள்ளவர், மாநிறம் சிவப்புச் சேலை சட்டை அணிந்து 24-05-91 ல் உரும்பராய் செல்வதாகக் கூறிப் புறப்பட்டவர். யாரா வது கண்டால் தகவல் தரவும் இ. புவனேந்திரராசா, பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.
(R/ 1427)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 06 - 01

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுக் காணாமல் போன தமிழ்ப்பொதுமகன்

1986ஆம் ஆண்டு யாழ். கோட்டைமுகாம் இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் பலியான 2 சிறுவர்கள், 2 பெண்கள்

1987ஆம் ஆண்டு கோப்பாய் பாலத்தடியில் லொறியொன்றின் மீது உலங்கு வானூர்தியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் பலியான பொதுமக்கள்.

1988ஆம் ஆண்டு மயிலம்பாவெளியில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**லெப். மனோ** (சாத்தமுத்து சின்னராசா - ஆரையம்பதி மட்டக்களப்பு)

இதே ஆண்டு ஆரையம்பதியில் இந்தியப்படையினராலும் தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட
**றொபேட்** (நல்லையா சிறீபாலா - ஆரையம்பதி)

இதே ஆண்டு தம்பலவத்தையில் தேசவிரோதிகளால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட
**தீபன்** (சி. குகராசா - சின்னவத்தை)

இதே ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தேசபக்தர்
**பாக்கியம் அக்கா** (உரும்பராய்)

இதே ஆண்டு தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான
**கதிரிப்பிள்ளை நடராசா** (முத்தவினாயகர் கோயில் வீதி, நல்லூர்)

1989ஆம் ஆண்டு திருநெல்வேலியில் தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு இளைஞர்கள்

இதே ஆண்டு ஏழாலை வடக்கில் தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்களான இருதாய்மார்கள்
**உருத்திரசிங்கம் செல்வராணி,**
**சிவசுப்பிரமணியம் சிவஞானவதி** (ஏழாலை வடக்கு)

இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசத்துரோகிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக மரணமடைந்த பொதுமகன்

இதே ஆண்டு பருத்தித்துறையில் இந்திய அமைதிப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் மரணமடைந்த ஒரு பொதுமகன்

இதே ஆண்டு தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரஜைகள்
**குழு பிரமுகர் விஜயநாயகம் விஜயகுமார்** (தொண்டமனாறு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(R/ 2600)

வளைகுடா போரிலும், அதன்பின்பும்

# இரண்டு இலட்சம் ஈராக்கியர் உயிரிழந்துள்ளனர்

(வாஷிங்டன்)

வளைகுடாப் போரின் போதும் அதன் பிறகு ஏற்பட்டதாம் எதிர்ப்பு கிளர்ச்சிகளின் போதும் ஈராக்கிய தரப்பில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் உயிர் இழந்துள்ளனர் என சுற்றுச் சூழல் பராமரிப்புக் குழுவின் பசுமை பராமரிப்பு அமைதி (Green Peace) நிறுவனம் தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த ஆட்சேத புள்ளி விபரங்களை தாம் வெளியிட்டதன் நோக்கம் இன்னொரு ஜெனிவாக் கோட்பாட்டிற்கான உருவாக்கத்திற்காகவே எனத் தெரிவித்துள்ளது.

வளைகுடாப் போரின்போது ஈராக் தரப்பில் ஒரு லட்சம் வரையிலான ராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் இந்த எண்ணிக்கையின் அரைப்பங்கினர் 100 மணி நேரம் நடந்த தரைத்தாக்குதலில் இறந்தனர் என்றும்,

ஷியா - குர்திஷ் கிளர்ச்சிகளின்போதும் அகதிகளாக ஈராக்கை விட்டு வெளியேறிய போதும் 76,000 மக்கள் இறந்தனர் என்றும்

ஈராக்கில் நடந்த ஆரவாரமான தீவிரப்போரில் 20,000 மக்கள் இறந்தனர் என்றும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈராக்கால் குவைத் ஆக்கிரமிக்கப்பட்ட ஏழுமாத காலத்தில் இரண்டாயிரம் வரையிலான குவைத்திய பிரஜைகள் உயிர் இழந்துள்ளனர் என்றும் அமெரிக்க தலைமையிலான கூட்டணிப்படைகள் தரப்பில் 200 பேர் வரையிலேயே உயிர் இழந்தனர் என்றும் பசுமைபராமரிப்புஅமைதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈராக்கிற்கு எதிராய் நடத்தப்பட்ட கூட்டணிப்படைகளின் தாக்குதல் காரணமாகத்தான் ஏராளமான உயிர் இழப்புக்களும் மனிதகுலத்தின் இழப்புக்களும் ஏற்பட்டன என்றும் தனது அறிக்கையில் மேற்படி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# அடிஸ்அபாபாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் அமெரிக்கத் தூதுவரகத்தின் முன்பாக பெருமளவில் கூடி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர் அமெரிக்காவும் ஈ.பி.ஆர்.டி.எப். இயக்கமும் சேர்ந்து சதி செய்வதாக இவர்கள் கோஷமெழுப்பினர் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க ஈ.பி.ஆர்.டி.எப் இயக்கத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது கடந்த புதன்கிழமை எட்டுப்பேர் இவ்வாறுகொலையுண்டது தெரிந்ததே.

# வீதியால் சென்றோர் மீது இராணுவம் கடும் தாக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதியால் சென்ற அப்பாவிப் பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்

கடந்த புதன்கிழமை காலை பதினொரு மணியளவில் செங்கலடி அரசடி என்னுமிடத்தில் வெடிச்சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து வீதியால் சென்றுகொண்டிருந்த ஆண், பெண், குழந்தைகள் என வயது வேறுபாடின்றி இராணுவத்தினரால் பொதுமக்கள் தாக்கப்பட்டனர்.

தாக்கப்பட்டோர் பலரின், கால் உடைந்து படுகாயமடைந்துள்ளனர் இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் மக்கள் நடமாட்டம் குறைந்துள்ளது.

பாதுகாப்பு முறையை

# ராஜீவ் பின்பற்றாமையே கொலைக்குக் காரணமாம்

(சென்னை)

தமிழ் நாட்டில் ராஜீவ் காந்தி கொலையுண்டமைக்கு முக்கிய காரணம் அவர் பாதுகாப்பு விதிமுறை எதையும் பின்பற்றாதது தான் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர் குறிப்பாக தேர்தல் பிரசார நேரங்களில் ராஜீவ் காந்தி எந்த விதிமுறையையும் பின்பற்றாமல்மக்களோடு நெருங்கிப் பழகியதுதான் அவருக்கு ஆபத்தாக முடிந்தது எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# புலிகள் வெகுசன அமைப்பில் ஊடுருவியிருந்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வெகுசன அமைப்பொன்றின் உறுப்பினராக ஊடுருவி இருந்த கொழும்புடன் தொடர்புடைய நபரொருவர் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது

பல ஆதாரங்களுடன் கைது செய்யப்பட்ட அவரின் தகவலை அடுத்து வேறு சில நபர்களையும் புலிகள் கைது செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

# கிழக்கில் தமிழ் இளைஞர்கள் தொடர்ச்சியாக கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவதினரும், ரெலோ குழுவினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது பல அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது போன்ற சம்பவங்கள் இப்பகுதியில் தற்போது அதிகரித்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மட்டக்களப்பிலுள்ள கொக்குவில் என்னுமிடத்தை சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் இணைந்து சுற்றிவளைத்துத் தேடுதல் மேற்கொண்டனர்.

இத்தேடுதலின் போது கோ. கிருஷ்ணமூர்த்தி (வயது 19, கொக்குவில் மட்டக்களப்பு), சிவலிங்கம் பாலச்சந்திரன் (வயது 20 மாமாங்க கொலனி) ஆகியோருட்பட மூன்று தமிழ் இளைஞர்கள் இவர்களால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமையன்று மட்டக்களப்பு நகருக்குப் பொருள்கள் வாங்கச்சென்ற பொதுமகனான தங்கவேல் ஆனந்தராசா (வயது 19 இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு) என்பவரை சிறிலங்கா இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் ரெலோ குழுவினர் கைது செய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதுபோல் இதுவரை கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட இளைஞர்கள் எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இவர்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பேராளர் மாநாடு

(கொழும்பு)

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், அதன் 63 வது பேராளர் மாநாட்டை ஜூலை 28-ம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் நடாத்தவுள்ளது இம் மாநாடு தொடர்பான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளைச் சங்கங்கள் வருடாந்த பிரதேச மாநாடுகளை நடாத்தாத விடத்து, அவற்றை உரிய காலத்தில் நடாத்தி முடிக்கும் படி பணிக்கப்பட்டுள்ளது.

# மொராஜிக்கு பாக். விருது

(பம்பாய்)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மொராஜிதேசாய்க்கு பாகிஸ்தான் அதியுயர் விருது ஒன்றை அளித்துள்ளது. தெற்கு பம்பாயிலுள்ள அவரது வீட்டில் நடந்த எளிமையான விழாவொன்றில் இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் இந்தவிருதை வழங்கியுள்ளார்.

மேற்காசியாவிற்கான

# ஆயுத விற்பனைகளை நிறுத்த அமெ. கோரிக்கை

(வாஷிங்டன்)

மேற்காசியாவிற்கு ஆயுதங்களை விநியோகம் செய்யும் நடவடிக்கைகளை நிறுத்தி விடுமாறு ஆயுதங்களை விநியோகம் செய்யும் நாடுகளை அமெரிக்க ஜனாதிபதிஜோர்ஜ் புஷ் கேட்டுள்ளார்.

கடந்த புதன் கிழமை வாஷிங்டனில் பேசிய ஜோர்ஜ் புஷ் ஆயுத விற்பனை செய்வதில் குறிப்பாக மேற்காசிய பிராந்தியத்திற்கு செய்யப்படும் அணு ஆயுதங்கள், இரும்பு ஆயுதங்கள், உயிர் இரசாயன ஆயுதங்கள் ஆகிய மக்களின் அழிவிற்கு வழிகோலும் ஆயுதங்களை விநியோகிப்பதால் தமது அரசு உட்பட பிரித்தானியா, பிரான்ஸ், சீனா சோவியத் யூனியன் ஆகிய நாடுகளும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

ஆங்கில ஆசிரியர்

# விசேட பயிற்சி நெறி மீண்டும் ஆரம்பம்

ஆங்கில ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி நெறி மீண்டும் அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடபகுதியில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மட்டுமே இப்பயிற்சி நடைபெற்று வந்தது: ஆயினும் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் இது அரசினால் நிறுத்தப்பட்டது; இதனால் வடபகுதி ஆசிரியர்கள் இப் பயிற்சியை பெறுவதற்காக மிரிகம, பேராதனை கலாசாலைகளுக்கு செல்லவேண்டியிருந்தது. இதனால் பெரும்பாலான ஆசிரியர்கள் பயிற்சியைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே இதனை மீண்டும் பலாலி கலாசாலையில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் மேற்கொண்டு வருகிறார்.

அடுத்த கல்வி ஆண்டு 92/93 முதல் இப்பயிற்சி இங்கு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# பத்தாவது மக்களவை ஜூன் 20க்குள் அமையும் - வெங்கட்ராமன்

(டில்லி)

இந்தியப் பாராளுமன்றத்தின் பத்தாவது மக்கள் அவை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்குள் அமைக்கப்பட்டு விடும் என்று ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் தேர்தல் ஆணையகத்தின் ஆலோசனைக் கேற்ப இது விடுக்கப்பட்டதாகவும், பஞ்சாப் தவிர்ந்த ஏனைய அனைத்து மாநிலங்களிலும் அடுத்த மாதம் 18 ஆம் திகதிக்குள் தேர்தல் பணிகளை நிறைவேற்றிட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே நேரம் இரண்டாம் மூன்றாம் கட்ட திகதிகளை தேர்தல் ஆணையகம் உறுதிப்படுத்தியதை அடுத்து தேர்தல் பிரசாரம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

# இடமாற்றம்

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த டாக்டர் திருமதி யோகநாதன் இவ்வாரம் முதல் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்ய பட்டுள்ளார்.

இதனால் இவ்வைத்தியசாலையில் இருந்துவந்த வைத்தியர் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

# அதிபர் பரீட்சை பிற்போடப் பட்டுள்ளது

தரம் ஒன்று, தரம் இரண்டு, தரம் மூன்று பாடசாலை அதிபர்களுக்கான போட்டிப்பரீட்சை பின்போடப்பட்டுள்ளது

தரம் மூன்று அதிபர்களுக்கான பரீட்சை ஜூலை மாதம் 6 ஆம் திகதியும், மற்றும் தரம் ஒன்று, தரம் இரண்டுக்கான பரீட்சைகள் ஜூலை 13ஆம் திகதியும் நடைபெறும்.

# இல்லாதபிள்ளையின்பேரில் இலவச உலர் உணவு அட்டை

இல்லாத குழந்தைக்கும் இலவச உலர் உணவுஅட்டை வழங்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இலவச உலர் உணவுப் பொருள்களின் பெறுமதியும் அமைந்திருப்பது யாவரும் அறிந்ததே.

இதனால் கூடுதலான பொருள்களைப் பெறும் பொருட்டு மாதகலைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் இன்றுவரை தமக்குப் பிறக்காத குழந்தை ஒன்றிற்கு பெயரைச் சூட்டி அதனையும் தமது குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையில் சேர்த்து பலமாதங்களாக மேற்படி நிவாரணத்தைப் பெற்று வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் மாதகல் கிராம சேவையாளர் பிரிவில் நடைபெற்றுள்ளது (ச)

# செப்டெம்பருக்குள் மக்கள் மயம்

செப்டெம்பர் மாத இறுதிக்குள் சகல பஸ் டிப்போக்களும் மக்கள் மயப்படுத்தப்பட்டு விடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்து சபைகள் அனைத்தையும் மக்கள் மயமாக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டம் எதிர்வரும் செப்டம்பர் மாத முடிவிற்குள் முழுமையாக நிறைவேற்றப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில்

# 15,000 ஏக்கர் பரப்பில் சிறுபோக பயிர்ச்செய்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சிறுபோக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மையைவிட இம்முறை சுமார் ஐயாயிரம் ஏக்கர் நிலத்தில் கூடுதலாக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இரசாயனப் பசளைகளையும் உழவு இயந்திரங்களையும் பயன்படுத்தி வேளாண்மை செய்து வந்த விவசாயிகள் இம்முறை கால்நடைகளின் கழிவுப் பொருள்களையும் இலைதழைகளையும் உரமாகப்பாவித்தே விவசாயத்தை ஆரம்பித்துள்ளனர்.

இரணைமடுக் குளத்திட்டத்தின்கீழ் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சிறுபோக வேளாண்மை மேற்கொள்ளப்பட்ட அதேவேளை அக்கராயன் குளத் திட்டத்தின்கீழ் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்திலும் ஏனைய குளங்களின் கீழ் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்திலும் சிறுபோக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (49)

## ஒப்புநோக்குனர் தேவை

ஒப்புநோக்குனர் வேலையில் நல்ல அனுபவமும் தமிழ்ப் புலமையும் உடைய ஒருவர் தேவை. பத்திரிகைக் காரியாலயங்களில் பணி புரிந்த அனுபவம் உடையவர்கள் விரும்பத் தக்கது.

05. 06. 1991 இல் நேரடியாகவே சமுகமளிக்கவும்.

தொடர்பு: புதிய சித்திரா அச்சகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(R-1428)

---

யாழ் வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்

## தேவஸ்தானம்

## மணவாளக் கோலம்

1990 ஆனி மாதம் நடந்தேறிய இராஜ கோபுர மஹாகும்பாபிஷேக ஓராண்டு நிறைவை முன்னிட்டு 1991-06-03 திங்கள் (திருவோணம்) காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 4 00 மணிக்கு மணவாளக் கோலம், சுவாமி வெளி வீதி உலா ஆகியவை நடைபெறும்: அடியார்கள், துளசி, பூக்கள், இளநீர், பால் ஆகியவை இயன்றளவு கொண்டுவர வேண்டுகிறோம்.

— பரிபாலன சபை

(R / 1425)

---

## வலி. கிழக்கு ப. நோ. கூட்டுறவு சங்கம் அச்சுவேலி

# பதவி வெற்றிடம்

(தற்காலிகம்)

### கணக்கு லிகிதர் பதவிகள்:-

மூன்று வெற்றிடங்கள்

1, தகைமைகள்:- (அ) கூட்டுறவுப் பணியாளராக 14 ஆவது சம்பளத்திட்டத்தில் லிகிதராக 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

ஆ) க. பொ. த. [சா/த] பரீட்சையில் 5 திறமைச் சித்திகளுடன் கணிதம்/வர்த்தக கணிதம்/எண்கணிதம், சிங்களம்/தமிழ் பாஷை அடங்கிய ஆறு பாடங்களில் சித்தி (பிரதி இணைக்கப்பட வேண்டும்)

2. வயது:- 18 - 40 வயதுக்குட்பட்டவராக (ஆண்களாக) இருக்க வேண்டும். (பிறப்பு சாட்சிப் பத்திரம் இணைக்க வேண்டும்).

3. முக்கியம்:- க. பொ. த. உயர்தரம் / சா - தரத்தில் கணக்கியல் ஒரு பாடமாக உள்ளவர்களுக்கும் கூட்டுறவு பணியாளர் தராதரத்தில் சித்தியடைந்தவர்களுக்கும் கணக்கியலில் அனுபவம் (வேலை அனுபவம்) உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். (பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

4. மேற்படி சங்க எல்லைப்பரப்பிற்குள் நிரந்தரமாக (5 வருடத்திற்கு மேலாக) வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் கிராமசேவகர் அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்படவேண்டும்.

5. சம்பளத்திட்டம்:- இல. 302: 13;- 730 - 20x15-25x5 - 1055.

6, பிணை:- உரொக்கப் பிணை ரூபா 5000/-

7. தெரிவு செய்யப்பட்ட தகைமையாளர் இச்சங்கத்தில் குறைந்தது 10வருடங்களாவது தொடர்ந்து வேலை செய்யச் சம்மதமாயிருத்தல் வேண்டும். இக்காலத்துள் இடையில் விலகிச் சென்றால் உரொக்கப் பிணை மீளத்தரப்படமாட்டாது.

8. முடிவுத் திகதி:- 10-06-91 பி. ப. 3 மணிக்கு முன்பு நேரடியாக சங்கத் தலைமைப் பணிமனையில் கிடைக்கச் செய்ய வேண்டும் விண்ணப்பபத்திரம் மேற்படி சங்கப்பணிமனையில் ரூ 2/- செலுத்தி பெற்றுக் கொள்ளவேண்டும்.

பொதுமுகாமையாளர்

(R-2595)

---

## மேஜர் செங்கதிர் விளையாட்டுப் போட்டி

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு மேஜர் செங்கதிர் ஞாபகார்த்த விளையாட்டுச் சுற்றுப் போட்டிகள் வடமராட்சியில் நடைபெறவுள்ளன. அல்வாய் மனோகரா விளையாட்டு அரங்கில் முதலாவது சுற்றுப் போட்டியான 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டி ஆரம்பமாகவுள்ளது. இதில் 22 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன. ஆரம்ப விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் கலந்து விளையாட்டை ஆரம்பித்து வைக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நலன்புரிச் சங்கத்தின் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அபாயகாலத்தில் யாழ். செயலக ஊழியர்களின் நலன்களைப் பேணுவதற்கு செயலக நலன் புரிச்சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது

இதற்காக அனைத்து ஊழியர்களையும் அங்கத்தவராக சேர்த்துக் கொள்வதுடன் புதிய நலன்புரி நிதியம் ஒன்றையும் இச்சங்கம் ஆரம்பித்துள்ளது. (க)

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் சந்தியில் வல்லிபுரம் சுப்பிரமணியம் (தெல்லிப்பளைகிழக்கு) என்பவரது அடையாள அட்டை உரும்பராயைச் சேர்ந்த எஸ். மணிமாறன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப் பட்டுள்ளது உரியவர் ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

மண்ணிற மணிபேர்ஸ் ஒன்று திருநெல்வேலிக்கும் சுந்தர்மடச் சந்திக்குமிடையில் சுந்தர்மடத்தைச் சேர்ந்த வைகுமாரதாசன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அருள்மிகு பார்வதி அம்பாள் சமேத பரமேஸ்வரன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை (2·6 91) நடைபெறவுள்ளது. இதற்கான கிரியாகால நிகழ்ச்சிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன இந்த ஆலயம் சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## புற்றளையில் பாலர் பாடசாலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் புதிய பாலர் பாடசாலை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மேற்படி பாடசாலை அருள்மிகு புற்றளைச் சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையால் ஆலய மடாலயத்திலேயே ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிலவிரும்பும் பிள்ளைகளது பெயரை சபைச் செயலாளரிடம் பதிவுசெய்யுமாறும் இதில் கற்பிக்க விரும்பும் பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி பெற்றோரைத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர்

---

## ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டி - 1991

இன்று இறுதியாட்டம்

யாழ். இந்து மைதானம் காலை 9-00 மணி

**ஜொனியன்ஸ் வி. க. அணி**

எதிர்

**ஷப்றா அணி**

பிரதம விருந்தினர்:- திரு. வி. தியாகராசா (இளைப்பாறிய உதவி கல்விப் பணிப்பாளர்)

அனைவரும் வருக!

- ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் -

---

இலங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி

## இறுதிவருட பரீட்சை விடயம்

எதிர்வரும் ஆடிமாதம் 20 ஆம் திகதி இறுதி வருட பரீட்சை நடைபெற இருப்பதால் பரீட்சார்த்திகள் (85 ஆம் ஆண்டு, 86 ஆம் ஆண்டு மாணவர்கள் மற்றும் நூன சித்தியடைந்த மாணவர்கள்) அனைவரையும் 05 - 06 - 1991 அன்று காலை 10·00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சந்திக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
மாணவர் மன்றம்
L.A. M. C

(R / 1430)

---

யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

## மகாபொல கொடுப்பனவு

7ஆவது தவணைப் பணம்
(வைகாசி 1991)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்:

முதலாம் வருடம்:

| | | மு. ப. |
|---|---|---|
| மருத்துவ பீடம் ) | 31-05-1991 | 9-00 — 12-00 |
| கலைப் பிரிவு ) | 04-06-1991 | 9-00 — 12-00 |
| வர்த்தகப் பிரிவு ) | 06-06-1991. | 9-00 — 12-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு ) | | |

—பதிவாளர்

---

## மகாபொல கொடுப்பனவு

7ஆம், 8ஆம் தவணைப் பணம்
(வைகாசி, ஆனி 1991)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்

இரண்டாம் வருடம்

| | | பி. ப. |
|---|---|---|
| மருத்துவபீடம் ) | 31-05-1991 | 1-30 — 3-00 |
| கலைப் பிரிவு ) | 04-06 1991 | 1-30 — 3-00 |
| வர்த்தகப் பிரிவு ) | 06-06 1991 | 1-30 — 3-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு ) | | |

மூன்றாம் வருடம்

| | | மு. ப. |
|---|---|---|
| மருத்துவபீடம் ) | 03 06-1991 | 9-00 — 12-00 |
| கலைப் பிரிவு ) | 05-06-1991 | 9-00 — 12-00 |
| வர்த்தகப் பிரிவு ) | 07-06 1991 | 9-00 — 12-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு ) | | |

நான்காம் வருடம்

| | | பி. ப. |
|---|---|---|
| மருத்துவபீடம் ) | | |
| கலைப் பிரிவு ) | 03-06-1991 | 1-30 — 3-00 |
| வர்த்தகப் பிரிவு ) | 05-06-1991 | 1-30 — 3-00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு ) | 07-06-1991 | 1-30 — 3-00 |
| மருத்துவ பீடம் - 5ஆம் வருடம் ) | | |

—பதிவாளர்

(B- 2599)

### சிந்தனைக்கு

நிகழ்காலம், கடந்தகாலம் இரண்டும் எதிர்காலத்தில் அடங்கியிருக்கும்.

டி. எஸ். எலியட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01.06 1991
தொலைபேசி
அலுவலகம்: 025-2839 நிர்வாகவிடம்: 2208
த.பெ.எண் 05

## புதிய தலைவருக்கான நெருக்கடிகள்

இந்திரா காங்கிரஸின் புதிய தலைவராக பி. வி நரசிம்மராவ் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். சோனியா காந்தியை தலைவராக்க எடுத்த பகீரத பிரயத்தனம் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து தென்னிந்தியாவைச் சேர்ந்த (ஆந்திரா மாநிலம்) நரசிம்மராவ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நரசிம்மராவ் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டாலும், அவரது தெரிவின்போது கூச்சலும், குழப்பமும் நிலவியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன; ஆனால், எதிர்ப்புக்களும், போட்டிகளும் கிளம்பி கட்சி செயற்குழு கூட்டம் குழப்பத்தில் முடியாமல் போனதற்கு இரண்டு வாரங்களில் வரவிருந்த இரண்டாம், மூன்றாம் கட்ட வாக்களிப்புக்களே காரணம் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

திரு நரசிம்மராவ் நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர், அமைதியானவர். கடந்த காலத்தில் இந்திரா காந்தியின் ஆட்சியின் போதும், ராஜீவ் காந்தியின் ஆட்சியின் போதும் அவர்களுக்கு மிக விசுவாசமாக இருந்து நல்ல பெயர் எடுத்தவர். ஏனைய கட்சிக்காரர்களுடனும் முரண்பாடு கொள்ளாதவர்; ஆனால் கவர்ச்சிகரமானவர் என்று சொல்வதற்கில்லை. இவ்வாறான இயல்புகளைக் கொண்ட நரசிம்மராவ் குழப்பமும், சூழ்ச்சியும் மிக்க அரசியலைக் கொண்ட இந்திரா காங்கிரஸின் தலைமையை ஏற்றுள்ளார். ஆகையினால் இவரது பணி கடுமையானதாகவே இருக்கும் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை;

திரு; நரசிம்மராவ் தென்னிந்தியராக இருப்பதே இவரது தலைமைக்கான முக்கிய நெருக்கடியாகும். இந்திரா காங்கிரஸாக இருந்தாலும் சரி, இந்தியாவாக இருந்தாலும் சரி ஹிந்தி பேசும் மாநிலத்தவர் குறிப்பாக உத்தர பிரதேசத்தவர்களே தலைவராகவோ அன்றிப் பிரதமராகவோ வருதலே வழமையாக இருந்துவந்துள்ளது; ஆகையினால் ஹிந்தி பேசும் மாநிலத்தவர்கள் இவரது தலைமையை தொடர்ந்து ஏற்பார்களா என்பது சந்தேகமே;

இதனை வலியுறுத்துமாப்போல், இன்னொரு காங்கிரஸ் மூத்த உறுப்பினரான என். ரி. திவாரி கூட்டுத் தலைமையே காங்கிரஸுக்குப் பொருத்தப்பாடுஉடையதென ஆரம்பத்திலேயே தெரிவித்துள்ளார்.

எந்தத் தேர்தலுக்காக நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ அதே தேர்தல் நரசிம்மராவின் எதிர்கால அரசியலையும் தலைமைத்துவத்தையும் தீர்மானிக்கும் என்பது மட்டும் நிச்சயமாகும்.

பன்னிரெண்டு தினங்களுக்குள் பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸிற்கு வெற்றியொன்றைத் தேடிக் கொடுக்க வேண்டிய கட்டாய நிலை நரசிம்மராவிற்கு ஏற்பட்டுள்ளது. ராஜீவ் காந்தியின் கொலைக்கு முன்னர் நிலையான ஆட்சி என்ற பரப்புரையை பிரதானமாக கொண்டிருந்த இந்திரா காங்கிரஸ் அதனைத்தற்பொழுது முக்கியமாக கொள்ள முடியாது. ராஜீவ் கொலை தொடர்பான அனுதாப அலை மட்டுமே காங்கிரஸ் தேர்தல் பரப்புரையில் பின்பற்றக்கூடியது. ஆனால், அதுவும் ராஜீவின் குடும்பத்தினருக்கு கிடைக்கக் கூடியதே ஒழிய இந்திரா காங்கிரஸிற்குக் கிடைக்குமோ என்பது சந்தேகத்திற்குரிய விடயமே. இந்நிலையில் தேர்தல் வெற்றி என்பது காங்கிரஸிற்கு மிகவும் கடுமையான ஒன்றாகவே இருக்கும்.

ஆனால், தேர்தலில் வெற்றி தவறுமானால் அது சுமார் இரு வாரங்கள் தலைமை வகித்த நரசிம்மராவின் தலைமையின் குறைபாடே என குற்றச்சாட்டுகள் எழும். இதன் காரணமாக நரசிம்மராவ் நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டியும் வரும்.

அதேவேளை, தேர்தலில் ஏதோ ஒருவகையில் காங்கிரஸ்கட்சி வெற்றி பெற்றுவிட்டால், காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் அதாவது பிரதம மந்திரியாகவும் நரசிம்மராவ் தெரிவாவார் என்றும் திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது. இதனை ஏனைய பலமுள்ள ஹிந்தி பேசும் தலைவர்கள் ஏற்பார்களா என்பது சந்தேகமே,

இந்நிலையில், இந்திராகாங்கிரஸ் தேர்தல் வெற்றி பெறுவதுடன், தென் மாநிலத்தில் பெரியளவில் தேர்தல் வெற்றியை ஈட்டுவதுடன் வடக்கில் ஹிந்தி பேசும் தமது ஆதரவாளர்கள் வெற்றி பெறுவதன் மூலமே நரசிம்மராவ் தமது தலைமையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அல்லாது போனால், நரசிம்மராவின் இந்திரா காங்கிரஸிற்கான தலைமை ஒரு இடைக்காலத் தலைமையாக இருப்பதோடு, இந்திரா காங்கிரஸின் எதிர்காலமும் குழப்பம் நிறைந்ததாகவே இருக்கும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை.

# வடக்கு கிழக்குப் பகுதிகளில்

## புதிய உற்பத்திகளை இனம் கண்டுள்ளோம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பகுதியில் முன்பு இனங்காணப்படாத ஏராளமான புதிய உற்பத்திகளை நாம் சாதித்துள்ளோம் என தெங்கு பனம் பொருள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி. சபாரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்தகாலங்களில் இராணுவ அழிவுகளால் சேதமாகிப் போய்விட்ட எமது அலுவலக சேதாரபலலட்சக் கணக்கான நஷ்ட ஈடுகள் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுவிட்ட போதிலும் புனர்வாழ்வு அமைச்சிலிருந்து எமக்கு கிடைக்கவில்லை என்றும் கூறினார்.

ஆணையாளர் தமது குறுகிய கால வளர்ச்சி நிலை பற்றி கூறுகையில் சீனி உற்பத்தியும் சாராய உற்பத்தியும் மதுசார உற்பத்தியும் தற்போது முதன்மை நிலையில் இருந்து வருவதாகவும் இதன் மூலம் கணிசமான அளவு இலாபம் அடைய கூடியதாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

முல்லைத்திவு மாவட்டத்தில் விரைவில் நாளொன்றுக்கு ஒரு தொன் சீனி உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார் இது தவிர சீனி உற்பத்தியின் போது கழிவாக கிடைக்கும் பொருட்களில் இருந்து பெறப்படும் மதுசாரத்தின் செறிவுத் தன்மையைக் கூட்டிவாகன எரிபொருள் தயாரிக்கும்தொழில் நுட்பத்தை தாம் அறிந்துள்ளதாகவும்கூறினார்தற்போதுஉற்பத்தியாகும் மதுசாரத்தின் செறிவுஎண்பது வீதமாகஇருப்பதாகவும்இதன் செறிவு தொண்ணூற்று ஐந்து வரை அதிகரிக்கப்படுமிடத்து வாகனஎரிபொருளாக மாற்ற ஆராட்சிகள் செய்துவருவதாகவும் கூறினார். (லோ)

## தி. மு. க திருந்தவில்லை - பண்ருட்டி

(சென்னை)

தேர்தலுக்குப் பிறகும் இந்தியாவில் குழப்பமான - ஸ்திரமற்ற அரசியல் நிலையே நிலவுமெனவும், சந்திரசேகரே தொடர்ந்தும் பிரதமராக நீடிக்கக்கூடும் எனவும் தமிழக முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆருடம் தெரிவித்துள்ளார்; அவர் மேலும் தெரிவிக்கையில் தி மு க வின் கடந்த இரண்டு ஆண்டு ஆட்சிக் காலம் அவர்கள் திருந்தவில்லை எனக் காட்டுகிறது என்றும், இரண்டு திராவிடப் பாரம்பரியக் கட்சிகளையும் தமிழக மக்கள் ஆதரிக்கக் கூடாது எனவும் கூறியுள்ளார்;

## சமூகமளிக்கவும்

யாழ்.பல்கலைக்கழகமறுமலர்ச்சிக்கழகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள பெண்களுக்கான சுயவேலை வாய்ப்புப்பயிற்சித் திட்டத்தில் பயில்வதற்குவிண்ணப்பித்த அனைவரையும் இன்றுகாலை 10. 00 மணிக்கு மறுமலர்ச்சிக் கழகத்திற்கு சமுகமளிக்குமாறு மறுமலர்ச்சிக் கழகவட்டாரங்கள் அறிவித்துள்ளன.

### ஒன்றரை மாதகாலமாக

## செயற்பாடு அற்ற நிலையில் ஜே-66 கிரமசேவகர் பிரிவு

(நல்லூர்)

ஈச்சமோட்டை ஜே. 66 கிராம சேவையாளர் பிரிவில் கடந்த ஒன்றரை மாத காலமாக முக்கியமான கருமங்கள் எதுவும் நடைபெறுவதில்லை. இப் பிரிவுக்குள் புதிதாக மாற்றம் பெற்று வந்திருக்கும் கிராம சேவையாளரிடம் முன்னாள் கிராம சேவையாளர் முக்கியமானபத்திரங்களையும், கோவைகளையும் இது வரை கையளிக்கவில்லையாம்பொது ஆவணங்களைத் தமதாக்கி வைத்திடும் போக்கே இதற்குக் காரணம்;

இறப்பு, பிறப்புப் பதிவேடு, சான்றிதழ்படிவப் புத்தகம், அடையாள அட்டை தொடர்பான பதிவேடு ஆகியனவே மாற்றலாகி வந்த கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்படவில்லை. இதனால் கிராம சேவையாளர் அலுவலகத்துக்குச் செல்லும்பிரிவுமக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டியுள்ளது;

இதே வேளை நூறுக்கும் அதிகமான அடையாள அட்டை விண்ணப்பங்கள் போட்டது போட்டபடியே மேற்படி பிரிவு கி.சே. அலுவலகத்தில் கிடக்கின்றன; அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் செய்வதறியாது தடுமாறுகின்றனர்.

### மட்டு. எம். பி ஹிஸ் புல்லாவிற்கு

## நேர ஒதுக்கீடு செய்ய முஸ்லிம் காங்கிரஸ் மறுப்பு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவிற்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கையில் இறுதித்தீர்வு ஏற்படும்வரை முஸ்லிம் காங்கிரஸுக்கு பாராளுமன்றத்தில் ஒதுக்கப்படும் நேரத்தில் பேச அவர் அனுமதிக்கப்படமாட்டார் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்;

அஷ்ரப் பாராளுமன்ற சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இதனைத் தெரிவித்தார். இக்கட்சியின் பாராளுமன்ற குழுவின் பிரதித் தலைவராக சுந்தரமூர்த்தி அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தான் சபையில் இல்லாதபோதும் நாட்டில் இல்லாத போதும் அபூபக்கரே குழுவின் தலைவராக இயங்குவார் என்றும் சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

## எம். ஜி. ஆர். என்னைக் கலைஞர் என்றே கூறினார்

(சென்னை)

எம். ஜி. ஆருக்கும், எனக்கும் எவ்வளவுதான் கருத்து வேறுபாடு இருந்த போதிலும் அவர் என்னை கலைஞர் என்றுதான் எந்த மேடையிலும் சொல்லுவார் கருணாநிதி என்று ஆணவத்தோடு சொன்னது கிடையாது இவ்வாறு தி. மு. க தலைவர் மு. கருணாநிதி அறந்தாங்கியில் எம். ஜி. ஆர் உருவச்சிலையை திறந்து வைத்துப் பேசியபோது தெரிவித்தார்.

ஆனால் அ. தி மு க. தலைவி ஜெயலலிதாவோ மூச்சுக்கு முந்நூறு தடவை கருணாநிதி என முகம் சிவக்க ஆவேசத்துடன் பேசி வருகிறார் எனக் கருணாநிதி குறிப்பிட்டார்.

அரசியல் ரீதியாக எனக்கும் எம் ஜி. ஆருக்கும் கருத்து வேறுபாடு இருந்தாலும் நாங்கள் பழகிய நட்பை என்றும் நான் மறந்ததில்லை. அவரும் மறந்ததில்லை.

நாற்பது ஆண்டு காலம் நட்போடு பழகிய நண்பர், ஒரு முன்னாள் முதல்வருக்கு அரசியல் ஆதாயத்திற்காக அன்றி நன்றிக் கடனுக்கான நினைவு மண்டபம் கட்டினேன்.

அதனாலேயே எம். ஜி. ஆர் மருத்துவ பல்கலைக் கழகம் திரைப்பட கலைஞர்களுக்கு விருது என சில திட்டங்களை செய்து முடித்தேன்.

எம். ஜி. ஆர் யாரை துரோகி என்று எப்போது எந்த ஆண்டு எந்த நேரத்தில் எத்தனை மணிக்கு சொன்னார் என்பதை தகுந்த ஆதாரத்துடன் உரிய நேரத்தில் வெளியிடுவேன். இவ்வாறு எம். ஜி. ஆரின் உருவச்சிலையை திறந்து வைத்துப் பேசிய கருணாநிதி தெரிவித்தார்;

## மூன்று தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆயித்திய மலை என்னுமிடத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கரவெட்டி என்னுமிடத்தில் பதுங்கியிருந்த மூன்று தமிழ்ப்பொது மக்களைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை கரவெட்டி என்னுமிடத்தில் நடந்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்ட மூன்று பொதுமக்களில் இருவரை இராணுவத்தினர் விடுதலை.செய்துவிட்டு ஒருவரைமுகாமுக்கு கொண்டு சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மதிப்பீட்டு நிலையிலேயே உள்ளது

(யாழ்ப்பாணம்)

பண்ணையில் 1986 ம் ஆண்டுக்கு முன்பு இயங்கிவந்த கசரோக மார்பு நோய் வைத்தியசாலை மறு நிர்மாணம் செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில் இருந்து வருவதாக சுகாதார திணைக்களத்திலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்த மருத்துவமனையில் ஆய்வுகூடம்எக்ஸ்றேகதிர்படக் கருவி, ஆகியனவும் உட்பட பெருந்தொகையான தளபாடங்களும் கோட்டை இராணுவத்தின் தாக்குதலால்சேதமாகிவிட்டன. இந்த சேதத்தை மதிப்பீடு செய்ததில் புதிதாக ஒரு கட்டடம் கட்ட நான்கு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என 10 ம் திகதி 4ம் மாதம் 1990 ஆம் ஆண்டுயாழ் சுகாதாரதிணைக்களம் புனர்வாழ்வு அமைச்சுக்கும் சுகாதார அமைச்சுக்கும் அறிக்கை அனுப்பி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(லோ

# 847 லங்காசிமெந்து ஊழியரை வேலை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெற் ஊழியர்களை வேலையில்இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. லங்கா சிமெந்து லிமிட்டெற் ஆளணி, மற்றும் நிர்வாக அதிகாரி செல்வி பி. என். எஸ். கோறறை இதற்கான மனுவைக் கொழும்பு தொழில் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

இவ்வாண்டு ஜனவரி 9-ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இம் மனுவில் தொழிலாளரை வேலையிலிருந்து நிறுத்தி வைக்கும் சட்டத்தின் கீழ், லங்கா சிமெந்து லிமிட்டெற் ஊழியர் 847பேரையும் வேலை நீக்கம் செய்ய அனுமதிகோரியுள்ளார்.

மேற்படி மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம் சட்டத்தரணி ஆர்-சபாரெத்தினம் தொழிலாளர் தரப்பில் ஆஜரானார்.

1990 ஜூன் மாதம் முதல் தொழிற்சாலை இயங்கவில்லை. தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்குக் காலதாமமாகும் என்றும் சம்பளக் கொடுப்பனவு ரூபா 25 லட்சம் வழங்கப் பணமில்லை என்றும் மனுவில் காட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த மனுவில், மீளவும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் பட்சத்தில் வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்வழக்கின் தீர்ப்பு பிற்போடப்பட்டுள்ளது.

இதே வேளை மேற்படி தொழிற்சாலை ஊழியர்களுக்கு 1991 மார்ச் மாதம் முதல் 50 விகிதச் சம்பளமே வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் விமானப்படைக்கு மேலும் அமெ. விமானங்கள்

(வாஷிங்டன்)

அமெரிக்கா, பத்து எப் 15 ரக யுத்த விமானங்களை இஸ்ரேலுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளது என கூறப்படுகிறது

மேற்காசியநாடுகளுக்கு ஆயுத விநியோகங்களை குறைத்துக்கொள்ளுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் கடந்த புதன்கிழமை வாஷிங்டனில் உலக நாடுகளுக்கு ஒருகோரிக்கை விட்டிருந்தமை தெரிந்ததே.

ஆனால் அமெரிக்கா நேற்று முன்தினம் இஸ்ரேலுக்கு பத்து ஜெற் யுத்த விமானங்களை அளிக்கப்போவதாக அறிவித்துள்ளது. எவ் 15 ரக யுத்த விமானங்களை உடனடியாக வழங்குதம் என்றும் இஸ்ரேலின் ஏவுகணை பாதுகாப்பு திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்படும் செலவினத்தில் பெரும் பகுதியை வழங்குமென்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்ள் ஜெனி நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

# வங்கிசேவை முகாமையாளர் நஞ்சருந்தி தற்கொலை

(சுன்னாகம்)

சுன்னாகம் ப நோ. கூ. சங்கத்தின் வங்கிச் சேவை முகாமையாளர் திரு. சிவலிங்கம் நஞ்சருந்தி மரணமாகியதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இத்தற்கொலை பற்றி மேலும் தெரியவருவதாவது: கடந்த செவ்வாயன்றிரவு சுன்னாகம் ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ரூபா 2,65,000/- பணக்கையாடலொன்று இடம் பெற்றதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்குகிடைத்தமுறைப் பாடொன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ரூபா 2,65,000/- பணக் கையாடல் இடப்பெற்றது கண்டறியப்பட்டது.

கூட்டுறவுத் திணைக்களத்தினதும், மக்கள் வங்கியினதும் ஒத்துழைப்போடு நடந்த விசாரணையில் நெறியாளர்கள் பொது முகாமையாளர் வங்கிச் சேவை முகாமையாளர் ஆகியோர் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டனர். இவ் விசாரணைக்கு சமுகமளிக்காத வங்கிச் சேவை முகாமையாளர் திரு. சிவலிங்கம் கடந்த புதனிரவு நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப்பின் வியாழன் அதிகாலை 5.30 மணிக்கு மரணமாகியதாகத் தெரியவருகிறது.

## வடக்கு கிழக்கில்

# வழமை நிலை ஏற்படுத்த உடனடி நடவடிக்கை

நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் துரிதமாக வழமை நிலையை ஏற்படுத்துவதற்கான உடனடித் திட்டமொன்று நடைமுறைக்கு இடப்படுமென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இதற்கென ரூபா 200 கோடி திரட்டிய நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவல்களை அமைச்சர் ரனில் விக்கிரம சிங்கா தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை வழமைக்கு கொண்டு வருவது மிக அவசியமாகியுள்ளது என்றும் தெரிவித்தார். சேதமடைந்த அரசாங்க கட்டடங்கள் திருத்தப்படவுள்ளன, திணைக்களங்களுக்கு தேவையான தளபாடங்கள், உபகரணங்கள் உடனடியாக வழங்கப்படும்

# இன்றைய கருத்தரங்கில் நான்கு கட்டுரைகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ வள ஆய்வுக் கருத்தரங்குத் தொடரின் இறுதிநாளாகிய இன்று நான்கு கட்டுரைகள் ஆய்வு செய்யப்படவுள்ளன;

இதில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய ''பண்பாடும் கலையும்'', தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரம் எழுதிய ''தமிழீழ இலக்கிய வளம்'', கலாநிதி ப.கோபால கிருஷ்ண ஐயர், கலாநிதி ஜெ. சந்திரகாந்தன் ஆகியோர் எழுதிய ''இந்துமத, கிறிஸ்தவமத சமயப் பின்னணி'' கலைப் பீடாதிபதி எழுதிய ''குடிபெயற்றம்'' ஆகிய கட்டுரைகளே ஆய்வு செய்யப்பட உள்ளவையாகும்.

இன்று காலை 9மணியிலிருந்து 5மணிவரை யாழ். கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மறுமலர்ச்சிக்கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்திய

பின் இயக்குநர் விஜயகரன் தலைமையிலானஇக்குழுவினர் முதலில் சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில ரணதுங்காவைச் சந்தித்து ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக ஆலோசனை கலந்தனர்.

பொலிஸ் மா அதிபர் ஏர்ணஸ்ட் பெரேராவையும் புலனாய்வுக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

புலனாய்வுப்பணியில் எல்லா வழியிலும் உதவுவதாகக் கூறியிருக்கும் இலங்கை அரசு, ராஜீவ்காந்தி கொலையுடன் விடுதலைப் புலிகளுக்கும் பங்கிருப்பதாகத் தான் நம்புவதாகத் தெரிவித்தது.

போரைத்

தெரிய வருகிறது. சமீபகால இராணுவத்தாக்குதல் நடவடிக்கைகள் புலிகளால் முறியடிக்கப்பட்டதால் இராணுவ மேலாதிக்க நிலையிலிருந்து பேச்சுக்களை நடத்தும் அரசின் திட்டமும் தோல்வி கண்டிருக்கிறது இராணுவத்திற்கு தொடர்ந்தும் கால அவகாசம் கொடுத்தாற்போல் வெற்றிகளை சாதிக்குமா என்பதிலும் அரசு மட்டத்தில் சந்தேகம் எழுந்திருக்கிறதாகத் தெரிகிறது.

இந்த நிலைமைகள் ஒருபுறமிருக்க, யுத்தத்தை நீண்டகாலத்திற்கு தொடர முடியாத பொருளாதார நெருக்கடியும், உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களும் சமாதானப்பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வை தேடும் நிர்ப்பந்தத்தை சிறிலங்கா அரசுக்கு ஏற்படுத்தி வருகிறது. இப்படியான காரணங்களால், தமிழர் பிரச்சினை குறித்து அடுத்து என்ன வழிமுறையைக் கையாளுவது என்பதில் பிரேமதாசா அரசு குழம்பி-போய் இருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

நிவாரணம்

மேலும் திகைத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் தொடர்ந்தும் வழங்கப்படவிருக்கிறது அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினாலும்கூட அவர்கள் இடம்பெயர்ந்த மக்களாகவே கருதப்பட்டு அவர்களுக்கான நிவாரண விநியோகம் தொடர்ந்துகொண்டிருக்கும் என்று செயற்திட்டப் பணிப்பாளர்தெரிவித்தார். (ச

# ஆட்டோ சங்கருக்கு தூக்குத் தண்டனை

(சென்னை)

சென்னையில் கொலைகள் உட்பட பல குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டமையால் பிரபல்யமான ஆட்டோ சங்கருக்கு நேற்று செங்கல்பட்டு செசன்ஸ் நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது ஆட்டோ சங்கரின் சகா ஒருவருக்கும் இவ்வழக்கில் தூக்குத் தண்டனை விதித்த செசன்ஸ் நீதிமன்றம் மேலும் ஐவருக்கு ஆயுள் தண்டனையை விதித்து தீர்ப்பளித்துள்ளது திடுக்கிட வைக்கக் கூடிய பல குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டிருந்த ஆட்டோ சங்கருக்கு பல பிரபல அரசியல் வாதிகளுடனும் தொடர்புகளிருந்தமை தெரிந்ததே.

டேவிட்

தூதுவரை திருப்பி அழைக்குமாறு பிரிட்டன் கோராது என்றும், ஆனால் பொருத்தமான பதிலடி கொடுக்கப்படும் என்றும் கூறியுள்ளன.

டேவிட் கிளஸ்ரோன் வெளியேறுவதைத் தொடர்ந்து பிரிட்டன் இலங்கை உறவுகளில் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிய வருகின்றது.

மட்டு

வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதார வைத்தியசாலை ஒன்றுக்கு தேவையான வசதிகள்கூட இல்லாத நிலையில் பொது வைத்தியசாலை என்ற பெயருடன் இயங்கி வந்த இந்த வைத்தியசாலை இவ்வாறு பெயரளவில் தரம் உயர்த்தப்பட்டிருப்பது குறித்து வெளிவரும் செய்திகள் மட்டக்களப்பு மக்களுக்கு நகைப்பையே ஊட்டியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

பெசாவ

தன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

குடியிருப்புப் பகுதிகளில் ஆயுதக் கிடங்கிலிருந்து ஏவுகணைகள் பல விழுந்து வெடித்ததாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன பயத்தினால் பலர் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர்.

குண்டு வெடிப்புக்கான காரணம் தெரியவில்லை. ஏப்ரல் 1988 இல இதே மாதிரியான குண்டு வெடிப்புச்சம்பவம் ராவல்பிண்டியில் நிகழ்ந்து இதனால் சுமார் நூறு பேர் உயிரிழந்தனர்.

தலைவர்

தைப் பிரயோகத்தை வாபஸ் பெறக் கூறியும், அவர் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டாராம். இதைத் தொடர்ந்தே கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. இந்நிலையில் டாக்டர் பவானி கூட்டத்திலிருந்து தன்னிச்சையாக வெளியேறினார்.

இதேவேளை, தன்னுடன் வந்த சித்த மருத்துவ மாணவரை பல்கலைக்கழக ஆசிரியர் கூட்டத்தில் அனுமதிக்குமாறு டாக்டர் பவானி கோரிக்கை விடுத்ததாகவும் அவரின் இந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது:

பதவியிலிருந்து விலக்கப்பட்ட பெண் விரிவுரையாளர் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்திடம் பேச ஐந்து பேர் கொண்ட பல்கலைக் கழக ஆசிரியர் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சிக்கன கடன்

# கூட்டுறவுச் சங்கசமாசத்தின் கருத்தரங்கு இன்று

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபையின் சங்க நிர்வாகிகளுக்கான கருத்தரங்கு இன்று 1ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு பாண்டியன்தாழ்வு, சரத்பாபு லேன் பாலர் பாடசாலை மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெறும்(24

## கருணாநிதி அனுப்பிய

# புலிகள் பற்றிய கடிதத்தை சுக்ளா மறைத்து விட்டார்

தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய இந்தியப் பிரதமர் சந்திர சேகரின் புதாருக்கு முன்னாள் தமிழக முதலமைச்சர் கருணாநிதி எழுதிய பதில் கடிதத்தை முன்னாள் வெளியுறவு அமைச்சரும் தற்போதைய இந்திரா காங்கிரஸ் உறுப்பினருமான வி சி சுக்ளா தன்னுடன் வைத்துள்ளார்.

இந்த டெலக்ஸில் குறிப்பிடப்பட்டிருந்த விஷயங்கள் பிரதமர் சந்திரசேகருக்கும், அப்போதைய வெளியுறவு அமைச்சரான வி. சி. சுக்ளா ஆகியோருக்கு மட்டுமே தெரியும். மிக முக்கியத்துவம் வாய்ந்த இக் கடிதம் பிரதமர் அலுவலகத்திலேயே இருந்தது. பின்னர் இக்கடிதத்தைக்காணவில்லை எனக் கூறப்பட்டது.

யாழ். வைத்தியசாலைக்கு

தாகவும் தெரிவிக்கப்படுகிறது

இவ்வாண்டுக்கென ஒதுக்கப்பட்ட மேற்படி நிதி பயன்படுத்தப்படாதுவிடின் திரும்பிச் செல்லும். எனவே திருத்த வேலைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சீமெந்தினைக் கொழும்பிலிருந்து தருவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார். (ச)

உதயனுக்கு

ரது வீட்டிலும், ஜெயந்தி நகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும், கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடியிலும் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது. பெருந்திரளான மக்கள் சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பின் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (49)

தனியாரிடம்

அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்குத் தேவையான முழு அரிசி இறக்குமதியும் தனியார் வர்த்தகரிடம் ஒப்படைக்கப்படுமென்று மேற்படி அமைச்சு தெரிவித்துள்ளது.

# மட்டு. மாவட்டத்திற்கு 200 கோடி ரூபா ஒதுக்கீடு

மட்டக்களப்பு மாவட்டத்தின் புனரமைப்பிற்கு 200 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது என சிறிலங்காப் பிரதமர் டி. பி. விஜயதுங்கா அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய விஜதுங்கா மட்டக்களப்பு மாவட்டத்தின் புனரமைப்பிற்கு 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

தபாலக

ஆனால் இராணுவ நடவடிக்கை காரணமாக இம்முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.